

**ஹா**ஸ்பிட்டல் கேள்விப்பட்டிருப்பீர்கள். மொபைல் ஹாஸ்பிட்டல்? என்ன புதுசா இருக்கா! வாகனத்தில் மருந்து மாத்திரைகளோடும், கூடவே டாக்டர்களோடும் மருத்துவ வசதி இல்லாத கிராமத்துக்குச் சென்று, இலவசமாகச் சிகிச்சை அளிப்பதுதான் மொபைல் ஹாஸ்பிட்டல். கோவை ஈஷா யோகா மையம், முதன் முதலாக, தமிழகம் முழுவதும் 22 மொபைல் ஹாஸ் பிட்டல்களை அறிமுகப்படுத்தி வைத்திருக்கிறது. அதோடு அல்லாமல் தமிழகத்தில் நான்கு இடங்களில் நிரந்தரமான ஹாஸ்பிட்டல்கள் திறந்திருக்கிறார் கள். இந்த ஹாஸ்பிட்டல்களில் மருந்து மாத்திரை கள் உற்பத்தி விலைக்கே வழங் கப்படுவது கூடுதல் சிறப்பு!



**மே**ட்டுப்பாளையத்திலிருந்து நீலகிரி செல்லும் சாலையில் கல்லாற் றின் மீது இருக்கிறது தூரிப்பாலம். கிட் டத்தட்ட ஒரு நூற்றாண்டைக் கடந்து விட்ட தூரிப்பாலம், ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டது. இன் றும் சிறிதளவு கூடத் துரு பிடிக்க வில்லை. கோவை மாவட்டத்தில் சினிமா ஷூட்டிங் என்றால் இந்தப் பாலம் இடம்பெறும். நடிகர் சிவகுமா ரின் இனியொரு சுதந்திரம், ஸ்ரீப்ரியா வின் ஆட்டுக்கார அலமேலு போன்ற பல படங்களில் ஒரு கதாபாத்திர மாகவே வந்தது இப்பாலம்.





**ஆ**னைக்கட்டி சலீம் அலி பறவைகள் ஆராய்ச்சி மையம், கோவையின் வேடந்தாங்கல். பறவைகளைக் கவனித்தல், அவற்றின் வாழ்க்கை முறைகளை ஆராய்ச்சி செய்தல், பள்ளி மாண வர்களுக்கு பறவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவை இம்மையத்தின் முக்கியமான வேலைகள். "பறவைன்னா எனக்கு உயிர். என்னோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் இங்கே வருவேன். கரண்ட் கம்பத்துல உட்கார்ந்து ஒன்றுமே ஆகாதது பறவைக்குத்தான். குடும்ப மாகக் கூடிவாழும் பழக்கம் உயிர்களில் முதலில் தோன்றியது பறவை இனத்தில்தான்" என்கிறார் அருண்.